மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

01.08.2022 திங்கட்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com


# 60இலட்சம் இலங்கையர்களுக்கு உணவு இல்லை

## எங்களுக்கு உதவுங்கள்

## முன்னாள் ஜனாதிபதி உலகத்திடம் கோரிக்கை



இலங்கையில் ஏற்பட்டுள்ள உயர் பணவீக்கம் காரணமாக சுமார் 600,000 மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். உணவு, மருந்து, எரிபொருள், உரம் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியாமல் இலங்கையர்கள் பெரும் ஆபத்தில் இருப்பதாகவும், உலக உணவுத் திட்டமும் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது என்றும் அவர் கூறினார். பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற சர்வதேச தலைமைத்துவ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இந்த கருத்துக்களை வெளியிட்டார். யுத்த மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கை மீண்டு வரும் என சர்வதேச சமூகம் கூட நம்புவதாகவும்,

02 ஆம் பக்கத்தில்...

## அடுத்த பதினைந்து நாட்களில் அதிகளவானோர் கொரோனா தொற்றுக்குள்ளாகலாம்

அடுத்த பதினைந்து நாட்களில் அதிகளவானோர் கொரோனா தொற்றுக்குள்ளாகலாம் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் திரு.உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். பாடசாலைகள், அலுவலகங்கள் மற்றும் சமூகம் கூடும் இடங்களில் நோய் அறிகுறிகளுடன் கூடியவர்கள் அதிக எண்ணிக்கையில் பதிவாகி வருவதாகவும் திரு உபுல் ரோஹன குறிப்பிட்டார். சுகாதார வைத்தியர் அலுவலகத்தில் ஆன்டிஜென்

02 ஆம் பக்கத்தில்...

## புதிய அமைச்சரவை ஓகஸ்ட் 5ல் பதவிப்பிரமாணம்

புதிய அமைச்சரவை எதிர்வரும் 5ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளதுடன் இன்னும் பல அமைச்சுப் பதவிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அறியமுடிகின்றது.

## விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் தேசிய சமாதான பேரவை

பாராளுமன்ற ஆணையை புதுப்பிக்க கூடிய வகையில் விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என தேசிய சமாதான பேரவை (NPC) கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகில் அரிதாகவே காணக்கூடிய அரசியல் எழுச்சியை இலங்கை கண்டுள்ளது. மக்களால், மக்களுக்காக ஒரு நிராயுதபாணியான எதிர்ப்பு இயக்கம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை ராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தியது. எதிர்ப்பு இயக்கம் அதன் அளவு, செயல்திறன் மற்றும் வன்முறையற்ற தன்மை

02 ஆம் பக்கத்தில்...

## அரசியல் தலைகள் மாற்றும் சந்தர்ப்பவாத அரசியல் வேண்டாம்



தற்சமயம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம் பெற்றாலும், அரசியல் தலைகள் பரிமாற்றம் சம்பந்தப்பட்டவை, அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் அரசியல் சூதே இத்தகைய பல கலந்துரையாடல்களில்

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டாபய இலங்கைக்கு திரும்புவதற்கு இது சரியான தருணம் அல்ல - ரணில்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இலங்கைக்கு திரும்புவதற்கு இது சரியான தருணம் அல்ல என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ரொய்ட்டருக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நேரத்தில் கோட்டாபய ராஜபக்ச இலங்கைக்கு திரும்பினால் அது நாட்டில் மேலும்

02 ஆம் பக்கத்தில்...

## பிறப்புச் சான்றிதழில் ஆளடையாள அட்டை இலக்கம்

இலங்கையில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. முன்னோடி திட்டமாக மேற்கொள்ளப்படும் இந்த வேலைத்திட்டம் இன்று (01) முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கம்பஹா, தெஹிவளை, ஹங்குரன்கெத்த, குருணாகல், இரத்தினபுரி, தம்மன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இந்த முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பிறப்புச் சான்றிதழை பெற்ற சகல பிரஜைகளும் 15 வயதை எட்டிய பின்னர் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக, ஆட்பதிவுத் திணைக்களத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு எங்கள் ஆட்சிதான் - அமைச்சர் மனுஷ நாணயக்கார



தற்போதைய அரசாங்கம் எஞ்சிய இரண்டரை வருடங்களுக்கு நிரந்தரமாக இயங்கும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிக்கின்றார். நாட்டின் அரசியல் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு வருவதாகவும், பாராளுமன்றத்தில் அதிகூடிய பெரும்பான்மையுடன் ஜனாதிபதி நியமிக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிடுகின்றார். உலகம் கோரும் அரசியல் ஸ்திரத்தன்மையை பாராளுமன்றம் வழங்கியுள்ளதாகவும் பாராளுமன்ற


02 ஆம் பக்கத்தில்...

## மஹிந்த - பெசிலுக்கான வெளிநாட்டு பயணத்தடை மேலும் நீடிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஆகிய இருவருக்கும் விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை, ஓகஸ்ட் 4 ஆம் திகதிவரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. முறையான அனுமதியின்றி, நாட்டைவிட்டு வெளியேற முடியாது என்றும் உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

## எரிவாயுவின் விலை குறைக்கப்படும்



அண்மையில் அதிகரிக்கப்பட்ட எரிவாயு விலையை விட எதிர்காலத்தில் எரிவாயுவின் விலை குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். உலக சந்தையில் எரிவாயு விலைக்கு ஏற்ப, ஆகஸ்ட் 5ம் தேதிக்குள் எரிவாயு விலை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிடுகிறார். இப்போது குறைக்கப்பட்ட விலையை சரியாக ரூபாயில் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நான் உங்களுக்கு ஒரு குறிப்பு கொடுக்கிறேன். சமீபத்தில் உயர்த்தப்பட்ட விலையை விட விலை குறையும். 50ஆல் உயர்த்தினோம். ஆனால், நிச்சயமாக அதைவிட பல மடங்கு குறையும்.என்றார்.

## இலங்கைக்கு இத்தாலி அவசர நிதியுதவி



உணவு பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் இலங்கைக்கு 300,000 யூரோக்களை அவசர உதவியாக வழங்க இத்தாலி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொழும்பில் உள்ள இத்தாலி தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது. இந்த அவசர உதவியானது உலக உணவு திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் என இத்தாலி தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

### 60இலட்சம் இலங்கையர்களுக்கு

ஆனால் இன்று இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும், எழுந்துள்ள அரசியல் ஸ்திரமின்மையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதன் காரணமாக இலங்கையின் சகோதரத்துவத்திற்கு இந்த தருணத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடு திரும்புவார் என தமக்கு எந்த தகவலும் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

### விரைவில் தேர்தலை நடத்த வேண்டும்...

### கோட்டாபய இலங்கைக்கு திரும்புவதற்கு ..

காரணமாக சர்வதேச சமூகத்தின் [illegible] கைப்பற்றியது. போராட்ட இயக்கத்தின் வெற்றிக்கு அதன் தன்னிச்சையான மற்றும் அமைதியான தன்மையே காரணம்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மக்களின் உண்மையான குறைகள்தான் போராட்ட இயக்கத்தை உருவாக்கி அதை வெகுஜன இயக்கமாக மாற்றியது. நாட்டில் நிலவும் பேரழிவு நிலைமைக்கான பொறுப்பை முன்னாள் அரசாங்கம் மறுத்ததுடன், நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது. வன்முறையைத் தொடங்கியதே அரசுதான். புதிய அரசாங்கம் ஒரு புதிய ஜனாதிபதியுடன் நடைமுறையில் உள்ளது, ஆனால் பெரும்பான்மை இன்னும் மே 2022 இல் ராஜினாமா செய்த அமைச்சரவையாகும். இது போராட்டக்காரர்களுக்கு மேலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதாரச் சரிவுக்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோருகிறது. "தவறான ஆட்சி மற்றும் ஊழல் காரணமாக நாடு அனுபவித்த பல சீரழிவுகள் காரணமாக மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் இழந்துள்ள பாராளுமன்ற ஆணையை புதுப்பிக்க முன்கூட்டியே தேர்தலை அறிவிக்குமாறு நாங்கள் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம்" என்று இலங்கை தேசிய சமாதான பேரவை தனது அறிவிப்பில் கோரியுள்ளது.

### அரசியல் தலைகள் மாற்றும் சந்தர்ப்பவாத ..

காணக்கிடைப்பதாகவும், இந்நேரத்தில்,தன்னைப் பற்றி சிந்திப்பதை விட நாட்டைப் பற்றி சிந்திப்பதே இடம் பெற வேண்டும் என்பதோடு, அமைச்சர்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதால் நாட்டுக்கு மேலும் சுமைகளை ஏற்படுத்ததாது, புதிய கட்டமைப்பின் கீழ் தேசிய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை எட்ட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று ஸ்ரீபூ நடைபெற்ற ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். நாடு குறித்து சிந்திக்கவும், நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தருணமும் வந்துள்ளதாகவும், சுயநலத்திற்கு பதிலாக, பரோபகார மனோபாவமும் சந்தர்ப்பவாதத்திற்கு பகரமாக நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கும் மனோபாவமும் வேண்டும் எனவும், சலுகைகள்,வரப்பிரசாதங்களைப்பெற்று மக்கள் மீது சுமையை ஏற்றுவதற்கு பதிலாக அறிவார்ந்த முறையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு சகல கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், நாடாளுமன்ற குழு அமைப்பின் ஊடாக சாதகமான பங்களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த அவர், வரப்பிரசாதங்களை பெற்று கூடிய சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இது நேரமல்ல எனவும்,தற்சமயம் பங்கேற்பு அபிவிருத்தி மூலம் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். இது தொடர்பில் தானும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி நம்பிக்கை கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

### அடுத்த பதினைந்து நாட்களில் அதிகளவானோர் கொரோனா

பரிசோதனை கருவிகள் இல்லாததால் நோயாளிகளை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நோய் பரவும் அபாயம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் துரதிஷ்டவசமான மரணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் சுகாதார ஆலோசனைகளை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக திரு.உபுல் ரோஹன மேலும் தெரிவித்தார்.

### பிறப்புச் சான்றிதழில் ஆளடையாள அட்டை இலக்கம்

விண்ணப்பிக்கும்போது, குறித்த இலக்கத்தை உள்ளீடு செய்து தேசிய ஆளடையாள அட்டை வழங்கப்படுமென, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.


### இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு எங்கள் ஆட்சிதான்....

உறுப்பினர்கள் ஐந்தாண்டு கால ஆணைக்காக நியமிக்கப்படுவதாகவும் அவர் கூறுகிறார். இதன்படி, எஞ்சிய இரண்டரை வருடங்களுக்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் இயங்கும் எனவும், இன்னும் இரண்டரை வருடங்களின் பின்னர் தேர்தல்நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த 6 மாத இடைக்கால ஆட்சியின் பின்னர் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்..

## மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 106 ஆவது வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

புனித இஞ்ஞாசியார் மனமாற்றம் பெற்ற 500வது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பிக்குமுகமாக மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 106 ஆவது வருடாந்த திருவிழா நேற்று (31) திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவடைந்துள்ளது.

கடந்த (22) திகதி மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் இடம்பெற்று, பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நவநாட் காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு, கடந்த 30.07.2022 திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு புனிதரின் திருவுருவப் பவனி வழமையான வீதிகளினூடாக வலம் வந்து மீண்டுமாக ஆலயத்தை வந்தடைந்ததும் நற்கருணை ஆராதனையும் ஆசீரும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 31.07.2022 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு பெருவிழா கூட்டுத் திருப்பலியானது மட்டக்களப்பு மாவட்ட இயேசு சபை மேலாளர் அருட்பணி ரீ.சகாயநாதன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் கொடி இறக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஆலய திருவிழா இனிதே நிறைவடைந்துள்ளது. நவநாட்காலங்களில் அருட்தந்தையர்களான ரீ.மரியதாஸ், ஏ.ஏ.நவரட்ணம் (நவாஜி), நிர்மல் சூசைராஜ், ரீ.ஏ.யூலியன், ஜேம்ஸ் சுரேஸ், ஜே.அனிஸ்ரன் மொறாயஸ் , எஸ்.ஜோசப் அற்புதராஜ் , பயஸ் பிரசன்னா மற்றும் அருட்தந்தை மெருசன் ஹென்றிக் ஆகியோர் அருளுரையாளர்களாகபங்கேற்று திருப்பலியினையும் ஒப்புக்கொடுத்திருந்ததுடன், இன்றைய திருவிழா கூட்டுத்திருப்பலியில் ஆலய உதவி பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார் உள்ளிட்ட ஆலயத்தின் முன்னால் பங்குத்தந்தையர்களும், இயேசு சபைத் துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் உள்ளடங்களாக பொது நிலையினர், பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் என அதிகளவிலானோர் கலந்துகொண்டு இஞ்ஞாசியாரின் அருளாசியினை பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

**22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்**

**12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்**



விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)

# நடுக்காட்டில் வைத்திய முகாம் அடியார்களுக்கு சிகிச்சை

## வைத்திய அதிகாரி டாக்டர் லதாகரனின் ஜீவசேவை!





**[ காரைதீவு நிருபர் சகா]**

கதிர்காம காட்டுப்பாதையில் செல்லும் அடியார்களுக்கு உதவுமுகமாக, நடுக்காட்டில் உள்ள நாவலடி எனுமிடத்தில் வைத்திய முகாம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. காட்டுப்பாதை திறக்கப்பட்ட அன்றுஸ்ரீ2பூ ஆரம்பித்த இந்த வைத்திய முகாம், தொடர்ச்சியாக எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடத்தப்படவிருக்கிறது. முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் அழகையா லதாகரனின் ஏற்பாட்டில் 12வது வருடமாக இந்த வைத்திய சேவை நடுக்காட்டிற்குள் நடத்தப்படுகின்றது. 56 மைல் தூரமான காட்டுப் பாதையின் நடுப்பகுதியில் எவ்வித வசதிகளும் இல்லாத இடத்தில் அடியார்களுக்கு இந்த வைத்திய சேவை நடத்தப்படுவது அனைவராலும் வியந்து பார்க்கப்படுகின்றது. டாக்டர் அ.லதாகரன் தலைமையிலான வைத்தியர்கள் சுகாதார துறை ஊழியர்கள் தமது சொந்த லீவிலே அர்ப்பணிப்பான சேவையை இரவு பகல் பாராமல் செய்து வருகின்றார்கள். காட்டுப்பாதையில் பல உபாதைகளுடன் நடந்து வருகின்ற அடியார்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது . காலிலே ஏற்படுகின்ற நோ மற்றும் சகலவிதமான நோய்களுக்கும் அங்கு தற்காலிக சிகிச்சை வழங்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று அங்கு சிகிச்சை பெற்று சென்றனர்.

# புதுக்குடியிருப்பு வாழைச்சேனை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்தோற்சவம்




**க.ருத்திரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான புதுக்குடியிருப்பு வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்தோற்சவம் ஆடிப்பூர தினமான இன்று ஸ்ரீபூபாசிக்குடா கடலில் பக்தர்களின் ஆரோகரா கோசத்துடன் இனிது நிறைவு பெற்றது. கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவப் பெரு விழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களும் கிரியை நிகழ்வுகளும் உற்சவ நிகழ்வுகளும் நடைபெற்றது. ஞாயிற்றுக் கிழமை சப்பறத்திருவிழாவும் நடைபெற்றது. இன்று அம்பாளுக்கு விசேட பூசை இடம்பெற்று அம்பாள் உள் வீதி வலம் வந்து பக்தர்கள் புடை சூழ ஆலய முன்றலில் உள்ள தீ மிதிப்பு இடத்திற்கு சென்று தீ மிதிக்கும் நேற்றிக் கடன் செலுத்தும் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கிய பின்னர் வாழைச்சேனை கல்குடா வீதி வழியாக ஆலயங்களை தரிசித்து அடியர்ஊர்வலமாக சென்று பாசிக்குடா கடலில் வழக்கம்போல் தீர்த்தம் ஆடப்பட்டது. திருவிழாக்கள் யாவும் ஆலயத்ததலைவர் பரராஜசேகரம் தலைமையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வீ.தயாபரக் குருக்களின் பங்குபற்றுதலுடன் பிரமோற்சவ பிரதம குரு கிரியாஜோதி தேசமான்ய சிவஸ்ரீ வெங்கடசுந்தரராம குருக்கள் நடாத்தி வைத்தார்.

# பேரூந்தின் மீது மரம் முறிந்து வீழ்ந்து விபத்து




**தலவாக்கலை பி.கேதீஸ்**

தலவாக்கலை பேருந்து நிலையத்தில் இன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தின் மீது பெரிய மரம் ஒன்று விழுந்ததில் பேருந்து சேதமடைந்துள்ளது. பேருந்து நிலையத்திலிருந்த இந்த மரம் கடும் மழை காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தலவாக்கலை பொலிஸ ார் தெரிவிக்கின்றனர். குறித்த நேரத்தில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் மீதே குறித்த மரம் விழுந்துள்ளது. இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. அதிகளவான மக்கள் கூடும் இடத்தில் இந்த பெரிய மரம் முறிந்து விழும் வேளையில் கடும் மழை பெய்ததாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்டம் சாதனை



**[எஸ்.எஸ்.அமிர்தகழியான்]**

2022 ஆண்டிற்கான கிழக்கு மாகாண விளையாட்டு விழாவானது பாசிக்குடா கடற்கரையில் அண்மையில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றுள்ளது. இதில் கடற்கரை கபடிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவில் இருந்து கலந்துகொண்ட பெண்கள் அணியின் முதலாம் இடத்தினை தம்வசப்படுத்தி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இப்போட்டித் தொடரானது கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் மட்டக்களப்பு பாசிக்குடாவில் நடைபெற்றுள்ளது. மேலும் இவ்விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட ஆண்கள் அணியை பிரதிநிதித்துவப்படுத்தி கடற்கரை கபடிப் போட்டியில் பங்கேற்றிருந்த மண்முனை வடக்கு மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து வீரர்களை உள்ளடக்கி கலந்து கொண்ட அணியானது மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் விவசாய கிணற்றில் விழுந்த காட்டு யானை



**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியபுர விவசாய பகுதியில் காட்டு யானையொன்று இன்றுஸ்ரீபூ தவறி விழுந்துள்ளது . பன்னிரண்டு வயதுடைய யானைக்குட்டியொன்றே இவ்வாறு விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விவசாய கிணற்றில் தவறி விழுந்த காட்டு யானையை மீட்க கந்தளாய் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் .சுன்னக்காடு பகுதியிலிருந்து உணவு தேடி சூரியபுர கிராமத்திற்கு வந்த காட்டு யானை மீண்டும் வனப்பகுதிக்குள் சென்று கொண்டிருந்த போது பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்ததாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். சூரியபுர பொலிசார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் கிராம மக்களுடன் இணைந்து வெட்டப்பட்ட கிணற்றில் இருந்த யானையை பேக்கோ இயந்திரம் மூலம் மீட்டு சுன்னக்காடுக்கு மிண்டும் துரத்தப்பட்டனர்.

# சித்த போதனா வைத்தியசாலையில் மூலிகை தகவல் மையம் ஆரம்பித்து வைப்பு

**பைஷல் இஸ்மாயில் –**

யாழ். கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் மூலிகைகள் மற்றும் நச்சுத்தாவரங்களை பற்றிய தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மூலிகை தகவல் மையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஐ.ஜெபநாமக்கணேசன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் காணப்படும் நச்சுத் தாவரங்கள் மற்றும் அவை தொடர்பான விடயங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பான அனைத்து விடயங்களையும் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இது பற்றிய முழுமையான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக சித்த மருத்துவ பேரறிஞர்கள் மற்றும் சித்த மருத்துவக் கலாநிதிகள் ஆகியோர்களின் வழி காட்டலின் கீழ் மூலிகை தகவல் மையம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், இன்றைய போக்குவரத்து பிரச்சனை மற்றும் மூலிகை தகவல் மையத்துக்கு வருகை தர முடியாதவர்களின் பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கு எழுகின்ற சந்தேகங்களை 021 – 2057104, 077 0661005 தொலைபேசி ஊடாகவோ அல்லது வட்சப் ஊடாகவோ அல்லது அிைஉதயககயெளுபஅயடை.உழஅ மின்னஞ்சல் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மட்டக்களப்பிலும் இன்று முதல் QR முறைப்படி எரிபொருள் விநியோகம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் கியு.ஆர் குறியீட்டு முறையை பின்பற்றி எரிபொருள் வழங்கும் திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதனை காண முடிந்தது. இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றைய தினம் எரிபொருள் வழங்கப்பட்ட அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குறித்த நடைமுறை பின்பற்றப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. இதன்போது சுகாதார முறைப்படி மாஸ்க் அணிந்து வருகை தந்தவர்களுக்கே எரிபொருள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திப்பணிகளை

# அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு

**நூருல் ஹுதா உமர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் **PSSP** செயற்றிட்டத்தின் கீழ் தெரிவான அக்கரைப்பற்று – பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் அபிவிருத்திப்பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு இன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், பணிமனை திட்டமிடல் வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், பனங்காடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய தமிழ்நாடு அரசாங்கத்தின் இரண்டாம் கடட்ட நிவாரணப் பொருட்கள் மட்டக்களப்பை வந்தடைந்தன

**[எஸ்.எஸ்.அமிர்தகழியான்]**

இந்தியாவின் தமிழ்நாடு அரசாங்கம் இலங்கை மக்களுக்கு வழங்கியுள்ள நிவாரணப் பொருட்களில் இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் நேற்று ஸ்ரீ0பூ திகதி மட்டக்களப்பை வந்தடைந்துள்ளது. கொழும்பிலிருந்து புகையிரதம் மூலம் எடுத்துவரப்பட்ட நிவாரணப் பொருட்களை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது வழிகாட்டல்களுக்கு அமைவாக மாவட்ட செயலக அதிகாரிகள் புகையிரத நிலைய அதிகாரிகளிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர். மாவட்டத்திற்கு இரண்டாம் கட்டமாக 43,825 பக்கட் அரிசி மற்றும் 11,925 பக்கட் பால்மா என்பன கிடைக்கப்பெற்றுள்ளது. மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள 14பிரதேச செயலகப் பிரிவிற்கும் குறித்த நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனிதாபிமான செயற்பாட்டு நிறுவனத்தின் ஆவணங்கள் திருட்டு




**வடமலை ராஜ்குமார்**

திருகோணமலை உவர்மலையில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அகம் மனிதாபிமான வள நிலையத்தின் உள்ள ஆவணங்கள் மற்றும் CCTV கெமரா சேவர் ஆகியன திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளரும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான கண்டுமணி லவகுகராசா ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார். கடந்த 30ம் திகதி அலுவலகத்தை வார விடுமுறைக்காக மூடி அதன் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மாலை 6.30 மணியளவில் அலுவலகத்தை திறந்த போது அங்கே எனது அறை கதவு உடைக்கபட்டு அங்கிருந்த ஆவணங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. அதே போல இன்னுமொரு அறையும் உடைக்கப்பட்டிருந்தது.லொக்கரும் உடைக்கப்படடிருந்தது. CCTV கெமரா சேவர் திருடப்பட்டிருந்தது. இது திருடர்களால் நடாத்தப்பட்டதாக நான் நினைக்கவில்லை காரணம் அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்கான அரிசி மற்றும் ஏனைய நிவாரணப் பொருட்கள் இருந்தது.அது போல பெறுமதியான மடிக்கனனி கெமரா, கனனித் தொகுதி போன்ற பொருட்கள் இருக்க தக்கதாக ஆவணங்களை மாத்திரம் திருடி இருக்கிறார்கள். இது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

எமது நிறுவனமானது உரிமை சார்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் போராடுகின்ற அமைப்பு அது மாத்திரம் இல்லாமல் 15 அமைப்புக்கள் கூட்டணியாக இருக்கின்ற வடக்கு கிழக்கு அபிவிருத்திக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து வருகின்றேன். இது 100 நாள் வேலைத்திட்டமான செயல் முனைவுப் போராட்டம் ஆரம்பிக்கபட்டுள்ளது. இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தோம். வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு கெரவமான நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோசமும் இந்த வேலைத்திட்டதில் முன் வைத்துள்ளோம் எனவே இதற்கான அச்சுருத்தலாக இருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கின்றோம். என மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளரும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழவின் ஒருங்கிணைப்பாளருமான கண்டுமணி லவகுகராசா கருத்து தெரிவித்தார்

## எரிபொருளுக்காக முச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள்



**[ரக்ஸனா]**

எரிபொருளுக்காக முச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எரிபொருளுக்காக முச்சக்கர வண்டிகளை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்தந்தப் பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவுக்கேற்ப இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதனடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள முச்சக்கர வண்டிகளை ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இளைஞர்களை உசுப்பேத்தி தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த தலைவர் எங்கே?

**[ காரைதீவு நிருபர் சகா]**

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இளைஞர்களை உசுப்பேத்தி தமிழர் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த தலைவர்கள் எங்கே? நாட்டிலா? வெளிநாட்டிலா? விலாசமே தெரியாமல் இருக்கின்றார். இவர்களை இன்னும் நம்புவதா? என தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பினார். பொருளாதார நெருக்கடியும் சமகால அரசியலும் எனும் கருப் பொருளில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் மக்கள் தெளிவு படுத்தும் கலந்துரையாடல்கள் வட கிழக்கு உட்பட பல இடங்களில் இடம்பெற்று வருகின்றன. அதனடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(31) காரைதீவு விபுலானந்த கலாச்சார மண்டபத்தில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது நாட்டில் தற்போது அரசியல் ரீதியானகுழப்பங்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளது.அண்மையில் ஜனாதிபதி தெரிவு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிவாகி இருந்தார்.எங்கள் மக்களின் கருத்துக்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.நல்லாட்சி அரசுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முட்டு கொடுத்தது. எதை சாதித்தது.நல்லாட்சியின் கதாநாயகர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள்.இந்த நாட்டில் மூன்று இனங்கள் வாழக்கின்றனர்.எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜனநாயகத்தின் பால் தமிழ் தேசிய கூட்டமைப்பானது பயணித்து கொண்டிருக்கின்றது என்றார். இதன் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன் சமகால அரசியல் போக்கு ஜனாதிபதி தெரிவும் கூட்டமைப்பின் வாக்களிப்பு தீர்மானம் பற்றிய தெளிவு படுத்தல்களை வழங்கினர்.





“வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்”

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# ஆவணி மடு பெருவிழாவுக்கான ஆய்த்தக் கூட்டம்

[ வாஸ் கூஞ்ஞ]

ஆவணி மாத மடு பெருவிழாவுக்காக பக்தர்கள் அதிகமானோர் கலந்து கொள்ள இருப்பதனால் வழமைபோன்று சகல ஆய்த்ததங்களை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்றது. எதிர்வரும் ஆவணி மாதம் 15 ந் திகதி **(15.08.2022)** நடைபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் யாத்திகர் ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் இது தொடர்பான ஆயத்த கலந்துரையாடல் நடைபெற்றது. திங்கள் கிழமை **(01.08.2022)** காலை 11 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இவ் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் மற்றும் இது தொடர்பான திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இவ் ஆவணி மாத பெருவிழாவுக்கு குறைந்தது நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும்

இவ் விழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத் திருதத்தலத்திலுள்ள 380 வீடுகளும் பக்தர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 200 க்கும் மேற்பட்டவர்கள் இவ் பெருவிழாவை முன்னிட்டு வீடுகளுக்காக விண்ணப்பித்திருப்பதாகவும் மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் இவ் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இவ் விழாவுக்காக தற்பொழுது ஓரிரு குடும்பங்கள் வரத் தொடங்கியுள்ளதுடன் கூடாரங்கள் அமைத்து தங்குவதில் அவர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். வருகை தருபவர்களுக்கான உணவுகள் போக்குவரத்துக்கள் குடிநீர் சுகாதாரம் மின்சார வசதிகள் பாதுகாப்பு போன்ற சகல வசதிகளும் கடந்த காலங்களைப் போன்று மேற்கொள்வதற்கான சகல எற்பாடுகளும் மேற்கொள்வது என இவ் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் மடு ஆலயப் பகுதிக்குள் ஒழுக்க சீர்கேடுகள் நடைபெறாதிக்கும் முகமாக பலத்த பாதுகாப்புக்கள் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ் பெருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயத்தங்கள் தொடர்பாக இவ் விழாவுக்கான இறுதி கலந்துரையாடல் எதிர்வரும் 9 ந் திகதி **(09.08.2022)** மடு ஆலய பரிபாலகரின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆடி மாத பெருவிழாவின்போது போக்குவரத்துக்கான எரிபொருள் கஷ்டநிலை காணப்பட்டபோதும் எதிர்பார்க்காத நிலையிலும் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருந்தபோதும் திட்டமிட்டபடி சகல திணைக்களங்களும் மிகவும் திறமையாக செயல்பட்டதாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அரச அதிபர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் இம்முறையும் அனைத்து திணைக்களங்களும் சிறந்த முறையில் செயல்படுவார்கள் என தாங்கள் முழு நம்பிக்கையுடன் இருப்பதாகவும் அவர் மேலும் இவ் கூட்டத்தின்போது தெரிவித்தார்.

# பாடசாலைக்கு கதிரைகள் வழங்கி வைப்பு



[எஸ்.எஸ்.அமிர்தகழியான்]

கட்டாரில் பணிபுரியும் காத்தான்குடி சமூகத்தின் **(KCQ)** ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு **(தேசிய பாடசாலை)** கதிரைகள் அன்பளிப்புச்செய்யும் நிகழ்வு நேற்றைய தினம் **(31)** பாடசாலை பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது. காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எம். சி. எம். ஏ. சத்தார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கட்டாரில் பணிபுரியும் சகோதரர்கள், பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் பொறியியலாளர் எம். எம்.பழுலுல் ஹக், செயலாளர் ரிபாய் கலீல், உப அதிபர் நிஹால், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் செயலாளர் கலந்தர் லெவ்வை, பழைய மாணவர் சங்க உறுப்பினர் எம் .எம். எம். சுபியான் மற்றும் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை பரீட் மண்டபத்தின் முக்கிய தேவையாகக் காணப்பட்ட கதிரைகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ.தெய்வேந்திரன்



பைஷல் இஸ்மாயில் –

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ. தெய்வேந்திரன் இன்று காலை **(01)** தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த என்.மதிவண்ணன் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக கடந்த 2022.03.31 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இலங்கை நிருவாக சேவை தரம்II யைச் சேர்ந்த ஏ.ஜீ. தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டார்.




“தா” என்றால் “இந்தா” என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)